சார்பு நீதிமன்றம், பண்ருட்டி

OS.No.169/2010

பி.வா.சா. 5

நாள் : 10 .08.2023

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ஜெயராமன் | | |
| த/ பெ | கிருஷ்ணமூர்த்தி | | |
| கிராமம் | கீழ்அருங்கணம் ,நத்தம் | வயது | 65 |
| தாலூக்கா | பண்ருட்டி | தொழில் | விவசாயம் |

2023 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 10 ஆம் நாள் மேற்குறிப்பிட்ட சாட்சியாகிய பி.வா.சா.5 ன் வாக்குமூலம் 1969 ம் ஆண்டு 44 வது சட்டத்தின் 4 வது பிரிவின் கீழ் திருமதி. S. உமா மஹேஸ்வரி,பி.ஏ.,எல்.எல்,எம்., சார்பு நீதிபதி(முழு கூடுதல் பொறுப்பு) அவர்களால் ஆணையிடப்பட்டு உறுதி கூறப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்படுகிறது.

**முதல் விசாரணை**

நான் இவ்வழக்கில் 3 ம் தரப்பினர் மற்றும் பி.வா.சா.5 ஆவேன். எனது முதன்மை சாட்சியத்திற்கு ஆதரவாக பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். மேற்படி பிரமாண நிரூபண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் உண்மை. மேற்படி வாக்குமூலத்தை எனது முதன்மை சாட்சியாக ஏற்றுக் கொள்ள கேட்டுக் கொள்கிறேன்.

வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.